# மாருதம்

7


பொது நூலகம்
05 - 8 - 1994
IC LIBRARY, JAFFNA
KULI BRANCH LIBRARY




மக்கள் சஞ்சிகை

விலை: 15-00

For all your Optical Requirements

just step into



# S.M. FERNANDO

'OPTICIANS'

580, HOSPITAL ROAD, JAFFNA.

(Near Bank of Ceylon)

# இதயத்திலிருந்து...



PUBLIC LIBRARY JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

மனம் படபடவென்று அடித்துக் கொள்ளும் போதும் முத்துக்கள் என்று கவிஞர் உவமிக்கின்ற வியர்வை சரீரத்தை நனைத்துக் கொள்ளும் போதும்......

இதயம் ஏதேதோ பேச நினைத்து; திறனற்று; ஓ........வென்று உரக்க அழச் சொல்லும் வேளையில், கண்களின் கண்ணீர் ஆறு பெருக்கெடுக்க, அணைக் கட்டுகளாக ஆயிரம் ஆயிரம் வாசக(ர்) இதயங்கள் மாற்றத்தினால் மாறி நிற்கும் போதும்........

''மாற்றம்'' மழலை பிறப்பான்.

இவ்வாறு சஞ்சிகை ஆக்க உருவாக்க வேலை களில் ஏற்படுகின்ற எத்தனையோ இன்னல்கள்; இடர்ப் பாடுகள் சொல்லும் தரமன்று.

— ஆசிரியர்

● கலவிக் களியின் மயக்கத்தே நிலவைத் துகில் என்று உடுக்கின்ற இலக்கியப் பெண்களையும், சாளரங்களும், கதவுகளும் உடுக்கின்ற விதம் விதமான ஆடை அணிகலங்களையும் இரசித்தவன். சேரிச்சிறுவர்கள் நிவாரணத்துக்காக நீள்வரிசையில் நின்ற காட்சிகளை?

● பாதணிகள் பாதங்களை அணிசெய்வன சில வேளைகளில் பாதாயுதங்களாகவும் சிலரைத் தாக்கப் பயன்படுகின்றதாக அறிகிறோம். ஆனால் கையணிகளாகப் பயன்படுத்தப் பட்ட நிகழ்வுகளைபண்பாட்டின்சிகரமான பல்கழகத்தின் 'ராக்கிங்' கலாசாரத்தில் காணக்கூடியதாக இருக்கின்ற நிலை ......

---

சுயநினைவுகள்

---

● வானில் பறந்த பெண் தலை சிதறி மரணம் பத்திரிகைச் செய்தித்தலைப்பு ஒரு கணம் சிந்திக்கவைத்த வேளை.........

● யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் பெரும் சனக்கூட்டம் எனது கண்கள் தேடலில் மிதந்தன நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல வரிசைகளில் அணிவகுத்து நிற்கின்றனர். ஆசிரியர்கள் அவர்களை வழிகாட்ட 'கியூ' ஆமை வேகத்தில் உள்ளே நகருகிறது. வேறெதுக்குமல்ல 'லிங்கம் கிறீம் ஹவுஸ்'க்குத்தான் .. ...

● மௌனிகா

# எப்படி வந்தது?

● **கழுத்தணி**

இங்கிலாந்தின் மன்னர் ஒருவர் ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடச்சென்றார். அப்பொழுது அவரின் துப்பாக்கி குறிதவறியதால் அவரின் கழுத்து எலும்பு சிறிது முறிந்துவிட்டது.

இது நடந்த மறுநாள் அவர் மந்திரி சபையில் முக்கியமாகப் பேசவேண்டியிருந்தது இதனால் அவர் என்னசெய்வது என்று சிந்தித்த போது அவருடைய மனதிலே ஒரு அருமையான யோசனை தோன்றியது. அதன்படி அவர் கழுத்தில் எலும்பு முறிந்த இடத்தை மறைக்க கழுத்தைச் சுற்றி கட்டுப் போட்டுக்கொண்டு நீண்ட பட்டுத்துணியை கட்டித் தொங்க விட்டுக்கொண்டு சபைக்குச் சென்றார்.

அதைக்கண்ட சபையில் இருந்தவர்களும் அழகுக்காக அதுபோலக் கட்டத் தொடங்கினார்கள். இதுவே பிறகு கழுத்தணி [ரை] கட்டும் பழக்கமாக மாறியது.

● நிலாமகன்

5–7 சட்டமும் சமயமும்

சமயத்தை ஏற்காதவன் இருப்பான் சமயத்தில் நம்பிக்கை வைக்காதவன் இருப்பான் அவனைத் திருத்த இருப்பது தான் சட்டம்.........

8- சுவையான புதினங்கள்

சுவைக்கு சுவையூட்டும் உணவுகளல்ல இவை. புதினங்கள்

9- கவிஞன் ஒரு கண்ணாடி

வாயிருந்து பேசமுடியாத ஊமைகள் என்கிறார் கவிஞர் சிலந்தி.

11–14 தொழில் நுட்ப கலா சாரம்

புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதத்தின் நுட்பங்கள்கூறி .. தொழில் நுட்ப கலாசாரம் பேசுகிறார் கட்டுரையாளர்.

15–18 வசந்தங்களும் வல்லூறுகளும்

ஒரு ஏழையின் துன்பங்களை சித்தரிக்கும் சிறுகதை.

19–21 தமிழ் அறிவியல் மேதைகள்

தமிழர்களின் கல்விச்சிறப்பினையும் உயர்ந்த நிலையினையும் உலகிற்கு பறைசாற்றிய எங்கள் நாட்டுத் தமிழறிஞர்கள் பற்றி ..

23 பிரியமானவர்களே!

இ. ஜெயக்குமாரின் புதிய பார்வையில் கவிதை

25–29 காசநோய்


மருத்துவபீட மாணவன் தொகுத்துத் தருகிறார்.

30–33 மதுவும்உளவியலும்

'குடி குடியைக் கெடுக்கும்' என்பார்கள், ஆனால் மனதையும் கெடுக்கும் என்கிறார் சக்திவேல்.

34 இலக்கியத்தின் நோக்கம் என்ன?

ஜெயராஜ் பதிலளிக்கிறார்




உடன் பிறந்தார்களைப் போலே — இங்கு
உலகில் மனிதரெல் லாரும்;
திடங்கொண் டவர்மெலிந் தோரை — இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

வாழ்த்துவோர்:

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**

**52, மணிக்கூட்டுக்கோபுர வீதி,**

**யாழ்ப்பாணம்.**

PUBLIC LIBRARY JAFFNA
CHUNDIKULI BRANCH

"சமயத்தை ஏற்காதவன் இருப்பான், சமயத்தில் நம்பிக்கை வைக்காதவன் இருப்பான் அவனைத்திருத்த இருநப்பது தான் சட்டம்: சமயத்தால் திருத்த முடியாத நிலை காணப்படும்வேளையில் சட்டம் ஓடிவந்து விடுகிறது."

# சட்டமும் சமயமும்



ம. ஜெயராமசர்மா

உலகத்திலே மனிதன் பிறக்கிறான். உண்கிறான், உறங்குகிறான், பின்மடிகிறான் விலங்குகளும் பிறக்கின்றன, உண்கின்றன, உறங்குகின்றன மடிகின்றன இவ்வாறு நடைபெறுகின்ற பொழுது மனித வாழ்வுக்கும் விலங்கு வாழ்வுக்கும் வித்தியாசம் காணப்படவில்லையே! மனிதனும் விலங்குதானா? விஞ்ஞான விளக்கப்படி மனிதனும் ஒரு வகை விலங்கே. ஆனால் அத்தகைய விலங்காக இந்த வாழ்க்கை முறையைக் கொள்ள முடியாது மனிதன் என்பவன் வெறுமனே உண்பதும் உறங்குவதுமாக மட்டும் இருப்பதனால் அது வாழ்வாகாது வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் வேண்டும் வாழ்வு என்பது இலட்சியத்தை நோக்கிச் செல்வதாக அமைய வேண்டும் எனவே எப்படியும் வாழலாம் என்ற ஒரு முறையும் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒருமுறையும் மனிதன் முன்னால் வைக்கப்பட்டுள்ளது. இப்படித்தான் வாழ வேண்டும் என்று சொல்லும் பொழுது அதற்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. அந்தக்கட்டுப்பாடுதான் சட்டமும் சயமும்.

மனிதனைத் தன்பாட்டிலே விட்டால் என்ன? அவனைக்கட்டுப்படுத்தி வாழச் செய்யப்பண்ணத்தான் வேண்டுமா? இவை காலங்காலமாகக் கேட்கப்பட்டுவரும் கேள்வியாகும். மனிதனை அவன் போக்கில்

விட்டால் அவன் தான் நினைத்த படியெல்லாம் செயற்பட்டு வருவான். முடிவில் காட்டுமிராண்டித் தனமான நிலையே தோன்றி நிற்கும். தறிகெட்டு நெறிகெட்டுப் போகாது இருக்க மனிதனைச் சீரான பாதையில் இட்டுச்செல்ல உருவாக்கப்பட்டனவே சட்டமும் சமயமும்.

சட்டமும், சமயமும் யாரால் ஆக்கப்பட்டன? மனிதனாலேயே இவை ஆக்கப்பட்டன. திருந்தியவர் களும், தெளிந்தவர்களும் சேர்ந்து இதனை ஆக்கிவைத்தனர் என லாம்: சட்டமும் சமயமும் ஒரு நாணயத்தின் இரு பக்கம் போல ஒன்றை ஒன்று தழுவி நின்று தான் மனித சமுகத்தைத் திருத்த முடியும் என்பது அறிஞர்கள் கருத்தாகும்.

மனித சமுகத்தைத் திருத்துவதில் பெரிதும் வலிமைமிக்கது சட்டமா சமயமா என்று வாதங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. ஒரு சாரார் சட்டமே என்றும் மற்றொரு சாரார் சமயமே என்றும் தத்தம் அறிவினுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற விதத்தில் கூறி நிற்கின்றனர். இரண்டும் மனித சமுதாயத்தின் ஈடேற்றத்துக்காக ஆக்கப்பட்டன. இரண்டும் மனிதனால்த்தான் ஆக்கப்பட்டன என உணராது சமயம் என்பது போலியானது என்றும் அது முழுக்க முழுக்க யாராலோ பெயர் சுட்ட முடியாத ஒருவரால் ஆக்கப்பட்டதென்றும் கூடக்கருத்துக்கள் தெரிவித்து சமயத்தை விடச் சட்டமே முக்கியமானது. சமுகத்தைத்திருத்தும் வல்லமை வாய்ந்தது என்று வாதிடுகின்றனர்.

இவர்கள் சமயம் என்று கருதுவது வெறும் சடங்குகளையும் மூட நம்பிக்கைகளையுமே ஆகும். உண்மையில் சமயம் என்றால் என்ன என்று இவர்கள் சரிவர உணரவில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது.

சமயம் என்பது ஒருவாழ்வியல் நெறியாகும். இந்துவாகவோ, கிறிஸ்தவனாகவோ, முகமதியனாகவோ, பௌத்தனாகவோ இருப்பது என்பது முக்கியமல்ல. அவன் உண்மையான சமயி ஆக இருக்கின்றானா என்பதே முக்கியம் ஆகும். வெளி வேஷங்கள் சமயம் ஆகாது. சமயத்தின் கொள்கைகளை மனத்தில் கொண்டு அதன்படி வாழ வேண்டும்.

உலகில் காணப்படும் சமயங்களை எடுத்துப்பாருங்கள் எந்தச் சமயமாவது மற்றவனுக்குத் தீமை செய் என்று கூறியுள்ளதா? எவை எவை நல்லனவோ அவற்றையெல்லாம் செய்யுங்கள் என்றுதான் எல்லாச் சமயங்களும் கூறியுள்ளன. அவற்றை நீங்கள் செய்யாவிட்டால் எதை அனுபவிப்பீர்கள் என்பதையும் சொல்லியிருக்கின்றன. இப்படிச் சொல்லுகின்ற நிலையில்த்தான் சமயங்கள் மாறுபடுகின்றன. சொல்லுகின்ற பாணியும் வேறுபடுகின்றது. அது மட்டுமல்ல இதை விளங்கிக் கொண்ட விதத்தாலும் மக்கள் தத்தம் மனப்போக்கில் வாழ முற்படுகின்றனர்:

பஞ்சமா பாதகங்களைச் சமயங்கள் செய்வது கூடாது என்கின்றன. அதைச் செய்கின்றவனுக்கு நரகம் தான் கிடைக்கும் என்று பயமுறுத்தி நிற்கின்றன. நரகத்தின் தன்மைகளைக் கதைகள் வாயிலாக எடுத்துச் சொல்லுகின்றன சமயங்கள். இக்கதைகளைக் கேட்கின்ற ஒருவன் தன் பாட்டிலேயே பயத்துக்கு உள்ளாகிப் பாவச்செயல்களைச் செய்யாமல் விட்டுவிடும் நிலை ஏற்பட்டு விடுகிறது. நல்லகரியத்தைச் செய்கின்றவனுக்குச் சொர்க்கம் கிடைக்கிறது என்று கூறி சொர்க்கத்தின் தன்மையையும் கதைகள் வாயிலாகச் சொல்லி நிற்கின்ற பொழுது அதன் அருமையை உணர்ந்து நல்லதைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் உருவாகிறதல்லவா? இதைச் செய்வதுதான் சமயம்.

சமயத்தை ஏற்காதவன் இருப்பான். சமயத்தில் நம்பிக்கை வைக்காதவன் இருப்பான். அவனைத் திருத்த இருப்பது தான் சட்டம். சமயத்தால் திருத்த முடியாத நிலை காணப்பட்ட வேளையில் சட்டம் ஓடிவந்து விடுகிறது.

சமயத்தினால்கிடைக்கப்போகும் தீர்ப்பு மறைமுகமானது. ஆனால் சட்டத்தினால் வழங்கப்படும் தீர்ப்போ வெளிப்படையானது. சமயத்தீர்ப்புக்கு நீதிபதியாக இறைவனையே விட்டு விட்டோம். ஆனால் சட்டத்தீர்ப்புக்கு எங்களில் ஒருவரே நீதிபதியாகி நிற்கின்றார். சட்டத்தினால் மனிதனைத்திருத்த முயற்சி எடுக்கப்படுகிறது சிலவேளை சட்டம் திருத்துவதற்குப் பதிலாக ஒருவனை வஞ்சம் தீர்க்கும் மனமுடையவனாகக் கூட மாற்றிவிடலாம். பொய்ச்சாட்சிகளும் கூறப்படலாம். அவற்றுக்கு காரணம் சட்டத்தை அமுல் நடத்துபவரும் சாதாரண மனிதரே. அவரின் விருப்பு வெறுப்புகளினால் சட்டம் சரிவர அமுல்படுத்தப்படாமற் கூடபோய்விடலாம் அல்லவா? இந்த நிலையில் சமுதாயத்தை வழிப்படுத்தசமயம்முன்வருகிறது.

சமயத்தின் முக்கிய அம்சம் மனச்சாட்சி ஆகும். இந்த மனச்சாட்சியை மேலெழப்பண்ணுவதன் மூலம் சமுதாயத்தின் சீர்கேடுகளைக்களையலாம் என்று சமயவாதிகள் கருதுகின்றனர். இவற்றை நோக்குகையில் இன்றைய உலகின் சமுதாயச் சீர்த்திருத்தத்துக்குச் சட்டமும் சமயமும் இன்றியமையாத அம்சங்கள் என்றே எண்ண வேண்டியுள்ளது எனலாம். ✠

---

ஒரு வகுப்பாரைக் குரூர மிருகமாகவும், மற்றொரு வகுப்பாரை அந்த மிருகத்துக்கு இரையாகும் பலவீன மிருகமாகவும் செய்யும் இன்றைய சமூக அமைப்பு ஒழியத்தான் வேண்டும்.

— காண்டேகர்



# சுவையான புதினங்கள்

● யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறவுண் வீதி (Brown road) என்று ஒரு வீதி உண்டு. அதே போல் சுண்ணாகத்தில் வெள்ளைவீதி (White road) என்றொரு வீதி உண்டு.

● மிக விரைவில் வரவிருக்கும் 2000 ம் ஆண்டில் பெப்பிரவரி மாதத்திற்கு 30 நாட்கள் 30 - 02 - 2000 ம் நாளன்று பிறக்கும் குழந்தைகள் தங்கள் பிறந்த நாளைக் கொண்டாட முடியாது. அதை அவர்கள் மறந்து விடவேண்டியதுதான் ஏன் என்றால் 1000 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பெப்பிரவரி மாதத்தில் 30 நாட்கள் வருமாம்.

● மண்புழுக்களுக்கு ஐந்துசோடி இதயம் என்பது உங்கள் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் உண்மை.

● கர்ப்பிணிப்பெண்கள் பஸ்ஸில் பயணம் மேற் கொள்ளும் போது குழந்தை பிறந்து விட்டால் அந்தக் குழந்தைக்கு வாழ்நாள் பூராகவும் பஸ்ஸில் இலவசமாக எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்ய அனுமதி வழங்கிவிடுகிறார்கள் இது சட்டமாகவும் உள்ளது. சீனாவின் தலை நகர் பீக்கிங்கில்.

● "RADAR" ரேடார் என்பதின் முழுப்பொருள் Radio Angle Direltion And Range என்பதின் சுருக்கமே இது பகைவர் விமானங்கள் வருவதை முன்கூட்டியே தெரிவிப்பதாகும்.

● ஜேர்மன் நாட்டு இராணுவத் தளங்களில் வாத்துக்கள் காவற்பணியில் ஈடுபடுகின்றன. புதிய சத்தத்தைக் கேட்டதும் இறக்கைகளை அடித்துக் கொண்டு சத்தமிடும் வாத்துக்கள் இப்பணியைத் திறம்படச் செய்கின்றன.

● மொனாக்கோ என்பது மிகச் சிறிய நாடு இந்த நாட்டு இராணுவத்தில் எண்பது (80) வீரர்கள் உள்ளனர். ஆனால் இந்த நாட்டு இசைக்குழுவில் 85 பேர் உள்ளனர்.

# கவிஞன்

# ஒரு



# கண்ணாடி

கவிஞன்...!

சிந்திக்கத் தெரிந்தாலும்

சிரிக்க முடியாதவன்!

கவிஞன்...!

சோகங்களை எல்லாம்

தனது பேனாவிற்கு

சொந்தமாக்கியபின்

ஊமையாகிப் போனவன்!

கவிஞன்...!

துன்பங்கள் எல்லாம்

அவன் வாழ்க்கையை

சுவீகரித்தபின்

தத்துவங்களை

சமர்ப்பித்துக் கொண்டிருப்பவன்!

கவிஞன்...!

கல்லிலே இருக்கும் அழகையும்

அழகினிலே தெரியும்;

அலங்கோலத்தையும்

பிரதிபலிப்பதால்

...... போன்றவன்!

● சிலந்தி

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



## வாசகர் இதயம்

மாற்றம் மக்கள் சஞ்சிகை மாணவர் மனங்களில் மட்டுமன்றி மக்களின் மனங்களிலும் இடம் பெற்று விட்டது அனைத்து உள்ளங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்திய மாற்றமே நீ நீடூழி வாழ்க

க. பகீதரன்
கொழும்புத்துறை

வளர்பிறை பகுதியானது வளர்ந்து வரும் இளம் சமுகத்தை வளர்த்தெடுக்கும் பகுதியாக அமைந்திருப்பது வரவேற்கத்தக்கதாக உள்ளது.

ஸ்ரீ : ஸ்ரீயாந்தி
உரும்பிராய்

மாற்றத்துக்குள் ஒரு மாற்றத்தை புகுத்தி தரமான சிறுகதைகளை மட்டுமல்லாது சகல விடயங்களிலும் சிறப்புற்று விளங்கும் மாற்றத்தின் வேண்டும் உங்கள் பணி தொடரட்டும் ..

குப்பிழானூர். தமிழினி

## பெண்ணைக்கவர?

ஒரு பெண்ணை வசப்படுத்த அவளுடன் நயமாகப் பழகவேண்டும். இந்த விடயம்!! தற்கால ஆண்களுக்குத் தண்ணிபட்டபாடு.

ஆனால் ஆதிகாலத்திலே ஆண்கள் மேற்கூறிய உண்மையைப் புரிந்திருக்கவில்லை. ஒரு பெண்ணைக் கண்டுவிட்டால் ஒரு மிருகத்தைத் துரத்துவது போல துரத்திச் செல்வான். அவள் இலகுவில் அகப்படாமல் இருப்பாளென்றால் கல்லினாலோ, தடியாலோ, ஈட்டியாலோ எறிந்து அவளை வீழ்த்திதான் வசிக்கும்குகைக்கு எடுத்துச் செல்லுவானாம். குகையிலே அவள் அவனுடன் வாழ இசைந்து விட்டால் அதற்கு பயமே காரணமாய் இருந்ததாம்.

எப்படி இருக்கிறது. ஆதிகால மனிதன் பெண் கொள்ளும் விதம்.

கே. எஸ். தர்ஷன்

**கருத்துக்கள் கட்டுரையாளர்களது;**
**எழுத்துக்கள் எழுத்தாளர்களது.**



கட்டுரை

# தொழில்நுட்பக் கலாசாரம்

● அக்கரைச்சக்தி

உலகம் முழுவதும் மனிதன் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளான். எல்லாம் வல்ல இறைவனுக்கோ படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களே உண்டு என இந்து மதம் கூறுகிறது. ஆனால் இறைவன் படைத்த விசித்திரமான மனித இனத்திற்கோ எண்ணிக்கையில் அடங்காத் தொழில்கள் உண்டு. ஒரு உடலின் சகல உறுப்புக்களும் பல தொழில்களை நிறைவேற்றுவதனாற் தான் அவ்வுடம்பிற்குள் உயிர் என அழைக்கப்படுகிற சக்தி ஒன்று செயற்பட முடிகிறது. நிறைவேற்றும் தொழில்கள் நிற்குமானால் உயிர் உடலை விட்டுப்பிரிந்து விடும். நிறைவேற்றும் முறையில் குறைபாடுகள் நிகழுமானால் உடல் நோய்வாய்ப்பட்டு உயிருக்குத் துன்பமேற்படும் இது மனிதனுக்கு மட்டுமல்ல உலகில் வாழும் சகல உயிர்ப்பொருட்களுக்கும் பொருந்தும். ஏனைய உயிர்ப்பொருட்களெல்லாம் இயற்கையின் வழியிலேயே தம் தொழில்களை ஆற்றி ஈற்றில் மடிந்துவிட, மனிதனுக்கு விசேடமாக உள்ள பகுத்தறிவு காரணமாக அவன் இயற்கையையே மாற்றித் தனக்கேற்ற வகையில் ஆக்கி தன் ஆணைக்குட்பட்டுச் செயற்படவல்ல தொழில்களை ஆற்றிவருகின்றான். அத்தொழில்களை எவ்வாறு, எப்போது, எங்கு ஆற்றினால் மிகக்கூடிய பயனைப் பெறலாம் எனச் சிந்தித்துக் கண்டுபிடித்த அம்சங்களையே தொழில்நுட்பம் என அழைக்கின்றோம். மனிதன் முதலில் தன் உடம்பின் வெளியுறுப்புக்களின் செயல்களை உற்றுநோக்கியும் வேறு உயிர்ப்பொருட்களின் செயற்பாடுகளை அவதானித்தும் தன் தொழில்நுட்ப அறிவைப் பெருக்கி அதைப் பயன்படுத்தவும் தெரிந்து கொண்டான். தன் கைகளின் அமைப்பையும் இயங்கும் வகை

யையும் கண்டு நெருப்புக்கோலையும், பாயும் மீன்களைக்கண்டு படகையும், பறவையைக் கண்டு விமானத்தையும், எதிரொலி கேட்டு வானொலியையும், வெளவால் எழுப்பும் கேளா ஒலியை அறிந்து ராடார் சாதனத்தையும் கண்டு பிடித்ததை உதாரணங்களாகக் கூறமுடியும்.

நவீன கால மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொரு கூறிலும் தொழில்நுட்பம் ஊடுருவியுள்ளது இது தொழில்நுட்ப மென்று தெரியாமலேயே பழக்கத்தின் காரணமாக பல வேலைகளை மனிதர் ஆற்றி வருகின்றனர். இவ்வாறு வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ள தொழில்நுட்ப அம்சங்களையே தொழில்நுட்பக் கலாசாரம் என்கின்றோம். தொழில்நுட்பத்தைத் தங்கள் கலாசாரத்தின் அம்சமாகக்கொண்டு உலகில் முன்னணியில் திகழும் நாடு எதுவென்று எவரைக் கேட்டாலும் அனைவருக்கும் ஜப்பான் நாடே சிந்தனையில் வரும். இத்தனைக்கும் ஜப்பான் நாடு தனது தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு மூலவளங்கள் நிறைந்த ஒன்றல்ல. ஆனாலும் ஜப்பானிய மக்கள் மிகவும் கூர்த்தமதியுடையவர்கள், எறும்பு போன்று சுறுசுறுப்பானவர்கள், உழைப்பு, எப்போதும் உழைப்பு என்ற தாரக மந்திரத்தை செயலில் கைக்கொண்டவர்கள் இரண்டாம் உலகப்போர்க்காலத்தில் ஏற்பட்ட அணுகுண்டு வீச்சு அழிவின்பின் ஜப்பான் நாடே இல்லாமல் போய்விடும் என எண்ணின ஆனால் வல்லரசுகள் அதன் தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றம்

---



## சிந்தனைச்சொல் அகராதி

**சந்திரன்:** பூமியைப் படம் பிடிக்கும்வீடியோ

**பல்லி:** (O.C) குறிசொல்லி

**நுளம்பு** நடமாடும் மருத்துவர்

**மனிதன்:** வாலில்லாத குரங்கு

**சூரியகந்த:** கொலை மயானம்

**ஆறு:** மலையின் கண்ணீர்

**தேநீர்க்கோப்பை:** எறும்பின் நீச்சல்க் குளம்

**தமிழன்:** நாடோடி

**பூமி:** ஏழை படுக்கும் பஞ்சணை

**கிளாலி:** மரணக்கடல்

வல்லரசுகளையே மிஞ்சக்கூடிய அளவில் உள்ளது. ஜப்பானிய உற்பத்தியான தொழில்நுட்பக்கருவிகள் மிகநேர்த்தியானதாகவும், அழகிய கலைவேறுபாடுகள் கொண்டதாகவும், உறுதிமிக்கதாகவும், நீடித்து உழைக்கத்தக்கதாகவும் இருப்பதனால் உலக மக்கள் மத்தியில் ஜப்பானின் ஆக்கப்பொருட்களுக்கு மதிப்பு உயர்ந்துகொண்டேபோகிறது. இதற்கெல்லாம் காரணம் ஜப்பானியமக்களின் வாழ்க்கையோடு ஒன்றிப்போன தொழில்நுட்பகலாசாரம் தான். அவர்கள் செய்யும் ஒவ்வொரு சிறு செயலும் நுண்ணறிவோடும் நுட்பத்தோடும் கூடியதாகவே இருக்கும்

நாம் தமிழர் என்று பெருமை கொள்கின்றோம். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என்றும் சொல்கின்றோம் நம் தமிழ்தான் ஆதிமொழி என்றும், மற்றெல்லா மொழிகளையும் விடச்சிறந்த மொழி என்றும் கூறிக்கொள்கின்றோம். ஆதி நாகரிகமே எம்முடையதுதான் என்று மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்களை உதாரணம் காட்டுகிறோம். மொத்தத்தில் மொழியுணர்வினால் மயக்கமுற்று எம் சிந்தனைத்திறன் மறைக்கப்பட்டுவிட்டது. ஆனால் எம் அனைவரையும்விட தமிழை நேசித்த மகாகவி சுப்பிரமணிய பாரதி"தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும். நாமமது தமிழரெனக்

## இளையவர்களே! இது உங்கள் பகுதி.

## வளர்பிறை

### ● நம்பிக்கை

நம்பிக்கை நார் மட்டும்
நம் கையில் இருந்தால்
உதிர்ந்த பூக்கள்
ஒவ்வொன்றாய் வந்து
ஒட்டிக் கொள்ளும்—கழுத்து
மாலையாகவும்—நாளை
நம்மைக்கட்டிக் கொள்ளும்

— ஸ்ரீ. ஸ்ரீயாந்தி

### ● உறவுகள்

மனவறையில் அமர்கின்ற
உறவுகள் எல்லாம்
மணவறையில்
அமர்வதில்லை.

— இ. ஜெ

### ● காளை நிலை?

பெண்களை நடத்தவிட்டால்
பேதைகள் நாமென்பார்கள்
அவர்
கண்களை நடத்தவிட்டால்
காளைநிலை என்னாகும்?

— யாதுமூரான்

கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?'' எனக்கூறிவிட்டு, புத்தகம் புதிய கலைகள், பஞ்சபூதத்தின் நுட்பங்கள் கூறி மெத்தவளருது மேற்கே அந்த மேன்மைக்கலைகள் தமிழில் இல்லை - சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று அறை கூவினான். ஆனால் தமிழராகிய யாம், பாரதி கூறிய படி எட்டுத்திக்குகளுக்கும் சென்று வருகின்றோம் தான். இங்கு நடைபெறும் பிரச்சனையைச் சாட்டாக வைத்து மேற்குலகம் செல்கின்றோம். ஆனால் அங்கிருந்து என்ன கொண்டுவருகிறோம் என்றால் கலைச்செல்வத்தையோ, தொழில் நுட்பச்செல்வத்தையோ அல்ல, வெறும் பொருட்செல்வத்தையே அள்ளிக்கொண்டு வருகின்றோம். எவ்வளவு பேதமை? மேற்கு நாடுகளின் தொழில்நுட்பங்களை அறிந்து அவற்றில் பொருத்தமானவற்றை இங்கு பயன்படுத்தும் வழிவகைகளைப்பற்றி எத்தனைபேர் சிந்திக்கிறோம் என்றால் கிடையாது என்றே கூறவேண்டும். ஜப்பானில் அணுகுண்டுவீசி 2 நிமிடத்தில் 2லட்சம் பேரைச் சாகடித்தனர் அமெரிக்கர்கள். ஆனால் இங்கு இருக்கும் சூழ்நிலையில் தொழில்நுட்ப முறைகளை எவ்வாறு பயன்படுத்தி இப்போதைய வாழ்க்கையை இலகுவாக்கலாம் என்ற சிந்தனையும் தோன்றியுள்ளது. எனவே மேற்கு நாடுகளுக்குச் சென்று வெறுமனே தமது சுயநலத்திற்காக எப்போதுமே அழியக்கூடிய பொருட்செல்வத்தைச் சேகரிப்பதோடு நின்றுவிடாமல், அதோடு தொழில்நுட்ப அறிவுச் செல்வத்தையும் சேகரித்து இங்கு வாழும் தமிழர்க்குப் பரிவர்த்தனை செய்யவேண்டியது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் தலையாய கடனாகும்.

அடுக்களை வேலைகளிலிருந்து அன்றாடத் தொழில்கள், செயல்கள் அனைத்திலும் தொழில்நுட்பம் ஊடுருவவேண்டும். செயற்றிறனை அதிகரித்து தொழில்களை இலகுவாகவும் சிறப்பாகவும் ஆற்ற இது அவசியம். தமிழர் வாழ்வில் தொழில்நுட்பக்கலாசாரம் பிரிக்க முடியாத அம்சமாக இருந்தாற்றான் அவர்கள் நவீன உலகில் தலை நிமிர்ந்து நிற்கமுடியும். ✠

---

## தேசாபிமானி யார்?

### முதலாம் சுற்றில் பெற்ற ஆதரவுச் சீட்டுகளின்படி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

1. கலாநிதி க. கனகராசா (தொழிலதிபர்)
2. திரு. க. மாணிக்கவாசகர் (அரசதிபர்)
3. திரு. இ. மகேந்திரன் (அதிபர்)




# வசந்தங்களும் வல்லூறுகளும்

''திடீரென ஏதோ சலசலப்பு கூர்ந்து கவனித்தான். சற்றுத் தூரத்தில் இருந்த பற்றைக்குள் இருந்து இரண்டு உருவங்கள் அவனை நோக்கி வேகமாக ஓடிவருவது அவனுக்குத் தெரிந்தது ஏன்? எதற்காக?

சூரியன் மேற்குத்திசை நோக்கித் தன் சுவடுகளைப் பதித்துக் கொண்டிருக்கும் நேரம் அந்த உரு ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. மனித வர்க்கத்தைச் சேர்ந்தது தானா? என்ற அங்கலாய்ப்பினை ஏற்படுத்தக்கூடிய உருவம். மூச்சோடு வீசுகின்ற சுழல்காற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல் வெட்டை வெளியிலே அந்தச் சைக்கிள் அங்கும் இங்கும் தள்ளாடியது வீதியில் நெருக்கமாக இருந்த குழிகளில் சைக்கிற் சக்கரங்கள் மாறிமாறி விழுந்து ''படார்'' ''படார்' என ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன.

---

● மேகதூதன்

---

அவனுக்கு இருபத்தைஞ்சு வயது தான் என்று சொன்னால் எவருமே நம்ப மாட்டார்கள். அவ்வளவு தூரம் அவன் அழகையும் பலத்தையும் இழந்துவிட்டான். ஒட்டி உலர்ந்துபோன உடல் குழி விழுந்த கண்கள், புழுதியினால் மெழுகப்பட்டது போன்ற சீவப்படாத தலைமயிர்கள். வறுமை அரக்கன் அவன் உடல் முழுவதும் சற்றுக் கூடுதலாகவே தன் முத்திரைகளைப் பதித்திருந்தான். இன்று வழமையிலும் பார்க்கச் சற்றுக் கூடுதலாக விறகுகளைக் கட்டிக்கொண்டு வருகின்றமையால் சைக்கிள் சமநிலைக்கு வர அடம்பிடித்தது! எந்த நேரமும் புரண்டு விடலாம் என்ற உணர்வில் அவன்

CHUNDIKULI ... LIBRARY

''பெடல்'' களை உழக்கிக்கொண்டிருந்தான்.

மனம் என்ற குரங்கு மெல்லத் தாவிப்பாய்ந்தது. அவன் நினைவுகளில் மனைவியும் குழந்தை வீணாவும் தோன்றி மறைந்தனர். அவன் கண்கள் பனித்தன. ஒரு ஏக்கப் பெருமூச்சு வெளிவந்தது: அவளின் நினைவுகள் அவனை ஆக்கிரமிக்கின்ற வேளைகளில் எல்லாம் அவன் சொல்ல முடியாத உணர்வுகளிற்கு ஆட்பட்டு விடுகின்றான். எவ்வளவு துணிச்சற்காரி அவள்? அவனோடு வாழும் அந்த வாழ்க்கைக்காக தன் பெற்றோரைப்பிரிந்து - உல்லாச வாழ்க்கையை இழந்து அவனையே தஞ்சமென வந்துவிட்டவள் அவள் அவன் அவளைப் போல் உல்லாசமாக வாழ்ந்தவனல்ல அவன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து ஏழ்மைக் காற்றையே சுவாசித்து கொண்டிருந்தவன். பள்ளிப் படிப்பிற்கு இடைநடுவில் முற்றுப்புள்ளி வைத்து விட்டு சிறுசிறு வேளைகளைச் செய்து அதில் வரும் அற்ப வருமானத்தைக் கொண்டு தன் உயிரைத் உடலிலேயே தங்க வைத்துக் கொண்டிருந்தவன்.

எப்படியோ அவனும் அவளும் சந்தித்துக் கொண்டபோது இதயங்கள் அவசரப்பட்டுப்பேசிக்கொண்டன. பெற்றோர்கள் நெருப்பாக எழுந்த போது அவள் அவனை நம்பி ஆறாகப் பாய்ந்து வந்து விட்டாள். அதன் பின்னர் அவளுடைய தாய்... தகப்பன்... சகோதரர்கள் .. உறவினர்கள்... எல்லா உறவுகளுமே அறுந்து போய்விட்டன. எல்லோருக்குமே அவள் ''இறந்து போனவள்'' ஆகிவிட்டாள். அவள் பெற்றோர் களைப் பிரிந்து இரண்டு வருடங்களாகின்றன.

அவன் அவளிற்குக் கொடுத்த காதல்ப் பரிசு தான் வீணா. வீணாவிற்கு ஒரு வயது பூர்த்தியாகின்ற வேளை தன்னைப்போலவே குழந்தை வீணாவும் வறுமைப் பேயின் பிடியிலே சுழலுவதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. ஆனால் ஜீரணித்துக் கொள்வதைத் தவிர வேறுவழியும் இல்லை என்று அதிகாலையில் அவன் விறகுகட்டிக்கொண்டு வருவதற்காகக் புறப்பட்டபோது அவள் கூறிய வார்த்தைகள் அவனிற்கு ஞாபகம் வந்தன.

''இஞ்சேருங்கோ .. நாளைக்கு வீணாவின்ரை முதலாவது பிறந்த நாளல்லே''

ஓம் தெரியும்''

அவனால் வேறு என்னத்தைத் தான் சொல்ல முடியும். அவர்களைப் பொறுத்தவரையில் பொழுது ஒவ்வொரு நாளுமே கேள்விக்குறியுடன் தான் விடிகின்றது. இந்த நிலையில் எப்படிப் பிறந்த நாள் கொண்டாட முடியும்?

அவ்வளவுடன் பேச்சை நிறுத்திக் கொண்ட போதிலும் அந்தக் கவலை அவன் நெஞ்சையும் அரித்துக் கொண்டுதானிருந்தது. அத

னால்த் தான் இன்று சற்று அதிக மாக விறகு கட்டிக்கொண்டு வரு கிறான். கொஞ்சம் கூடுதலாய்ப் பணம் கிடைத்தால் வீணாவிற்கு ஒரு புதுச்சட்டையாவது மலிவாக வாங்கிப் போடலாம். அந்தப் பழைய கிழிந்த சட்டைக்கும் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும். அவனது கால்கள் சைக்கிள் பெடலை வலிந்து உழக்கிக்கொண்டிருந்தன. காற்று எதிர்த் திசையில் கடுமையாக வீசியபொழுது அவன் பெடலில் முழுப்பலத்தையும் பிரயோகித்து ஏறிநின்றான். அவன் தனது சக்தியை இழந்து விட்டான். நாக்கு உலர்ந்து விட்டது. வயிற்றுக்குள் சிறுகுடலும் பெருங்குடலும் ஒன்றுடனொன்று மோதிக் கொண்டன. எதிரேயுள்ள காட்சிகளெல்லாம் மங்கலாகத் தெரிந்தன.

''தம்பி விறகு விக்கிறதுக்கே''

ஒரு குரல் அவனை சுயநிலைவுக்குக் கொண்டுவந்தது. அவன் பதில் சொல்லச் சத்தியின்றி 'ஓம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை மேலும் கீழும் ஆட்டினான். சைக்கிள் நின்றது விலையைத் தீர்மானிப்பதில் இரண்டு பேருக்கும் நீண்ட நேரம் வாக்கு வாதம் நடந்தது.

''தம்பி — ஒரு நூறு ரூபாயெண்டாலும் குறைச்சு விடும் இல்லாட்டி எனக்குக் கட்டாது, உந்த விறகு இருநூறு ரூபாய் கூடப் பெறாது நாலு சமையலுக்குள்ளை சாம்பலாய்ப் போகும்''

''ஐயா யோசிச்சுதான் கதைக்கிறியளே .. இந்த விறகைக் கொண்டு வாறதுக்கு நாங்கள் படுகிறபாடு உங்களுக்குத் தெரியுமே? சாப்பட்டிற்கும் சைக்கிள் திருத்திறதுக்குமே எவ்வளவோ முடியுது. இப்பிடி விறகை நீங்கள் வேறை ஆரிட்டையெண்டாலும் நானூறு ரூபாய்க்குக் குறைய வாங்குவியளே''

இறுதியில் அவரே அந்த விறகை முந்நூறு ரூபாவிற்கு வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

அவனுக்கு சைக்கிளிலும் மனத்திலும் அழுத்திக் கொண்டிருந்த பெரும்பாரம் சடுதியாகக்குறைந்து விட்டது. சுற்று முற்றும் பார்த்தான் எங்காவது கொஞ்ச நேரம் ஒய்வெடுக்க வேண்டும் போலிருந்தது.

★ ★ ★

அவன் வீடுநோக்கிப் புறப்பட்டபோது இருள் பரவ ஆரம்பித்து விட்டது. அவனது சைக்கிள் பிரதான சந்தியைக் கடந்து குறுக் கொழுங்கையூடாக விரைந்து கொண்டிருந்தது. இரவு ஏழுமணிக்கிடையிலை எப்பிடியாவது வீட்டை போய்விடவேணும் அவன் மனம் துள்ளிக் குதித்தது அவனது மனத்திரையிலே அவள் அன்பு பொங்க தன்னைப் பார்த்துச் சிரிப்பது போன்ற உணர்வு அதோ வீணா 'அ..ப். பா' எனத் தன் பொக்கை வாயைத் திறந்து மழலை மொழி பேசுகின்றாள் இருவரின் நினைவுகள் மாறி மாறி அவன் சிரித்து கொண்டான்.

''கடவுள் கண்திறந்து பார்த்திட்டார். எப்பிடியோ நாளைக்கு வீணாவின்ரை பிறந்த நாளைக் கொண்டாடிறதுக்கு வழிகிடைச்சி

ட்டுது அவளின்ரை இந்தஆசையை யாவது என்னாலை நிறைவேற்ற முடிஞ்சுது'' அவனுடைய உதடுகள் முணுமுணுத்தன அவன் உடலிலே ஒரு புதிய உற்சாகம் பிறந்தது. சைக்கிளை இலாவகமாகச் செலுத்தினான். இப்போது குழிகளற்ற நல்ல வீதியிலே சைக்கிள் விரைந்து கொண்டிருந்தது. அதனால் இரவான போதிலும் அவனால் வேகமாகச் சைக்கிளைச் செலுத்த முடிந்தது மனித நடமாட்டங்கள் குறைந்து விட்டன.

அவன் மனத்திலே நாளைய பிறந்த நாளினை எப்படி நேர்த்தியாகவும் சுருக்கமாவும் கொண்டாடுவது என்ற திட்டம் உருவாகியிருந்தது.

''நாளைக்குக் காலமையே வீணாவிற்குச் சட்டை. பிறந்த நாள் கேக். பலகாரங்கள் வாங்கிப் போட வேணும் காசு மிஞ்சினால் அப்பிடியே அவளுக்கும்ஏதாவது''

திடீரென ஏதோ சலசலப்பு கூர்ந்து கவனித்தான். சற்றுத் தூரத்தில் இருந்த பற்றைக்குள் இருந்து இரண்டு உருவங்கள் அவனை நோக்கி வேகமாக ஓடி வருவது அவனுக்குத் தெரிந்தது. ஏன்? எதற்காக? அவன் நிதானிப்பதற்கிடையில் அந்த உருவங்கள் நெருங்கி விட்டன.

''சதக்'' ''சதக்'' அவனின் முதுகிலே மாறிமாறி இரு குத்துக்கள் விழுந்தன. இந்த எதிர்பாராத தாக்குதலினால் அவன் நிலை குலைந்து சைக்கிளோடை வீதியோரத்திலே விழுந்தான். அவன் எர்த்துப் போராடத் தன் முழுப்பலத்தையும் ஒன்று திரட்டி முயற்சித்தான் அவனால் முடியவில்லை. அந்த இருசோடிக் கரங்களும் அவனைத் தரையிலே அழுத்தின. என்ன நடக்கிறது? என்ற உணர்வின்றி திக் பிரமை பிடித்தவன் போல் அழுந்திக் கிடந்தான். யார் நீங்கள்? ஏன் என்ன?

வார்த்தைகள் வெளியே வர மறுத்தன. அவனுடைய சேட்டுப் பொக்கற்றினுள் ஒருகரம்புகுந்தது மறுகணம் பொக்கற்று வெறுமையாகியது. இறுதியாக அவனுடைய வயிற்றிலே ஓங்கிய டித்து விட்டு பக்கத்திலிருந்த புதர்கள் நிரம்பிய காணியினூடாக அவர்கள் ஓடுவது தெரிந்தது.

அவன் கதறினான் ''ஐயோ— கள்ளர் .. கள்ளர் .. என்ரை காசு என்ரை உழைப்பு'' அவன் புலம்பிக் கொண்டு கிடந்தான். அவனுடைய புலம்பல் காற்றுடன் கலந்தது. அவனுடைய மனத்திலே அவள் தோன்றினாள். பரிதாபமாக மிகப் பரிதாபமாக — ''ஓ— வசந்தி'' அவன் கதறியழுதான். குழந்தை வீணா விம்முவது போல் உணர்ந்தான்.

''வசந்தி வீணா'' அவன் தன் கரங்களினால் முகத்தை மூடி கொண்டு கதறிக் கதறி அழுதான். அந்த இளம் நெஞ்சங்களில் ஏற்பட இருந்த சின்ன வசந்தம் கூட மனித வல்லூறுகளால் தட்டிப்பறிக்கப்பட்டன. அவன் தெருப் புழுதியிலே புரண்டான். சற்றுத் தூரத்தில் அவனது சைக்கிள் அனாதையாய்க் கிடந்தது. அவன் ஓசை மெல்ல மெல்ல அடங்கி .....

✠

(யாவும் கற்பனையுமல்ல)




# தமிழ் அறிவியல் மேதைகள்

❋ சா. சக்திதாசன்

**யாழ்** குடாநாட்டின் வடமராட்சியைச் சேர்ந்த இமையாணன் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அழகையா துரைராசா அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடத்தில் கற்ற நான்கு வருடங்களில் பாடங்களில்பெற்ற சராசரிப் புள்ளிகளை அவருக்குப் பின்வந்த எவருமே இதுவரையில் பெறவில்லை. இவ்வாறு படிப்பில் புலியாக விளங்கிய பேராசிரியர் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக 5 வருடங்கள் இருந்தபோது அவரது நிர்வாகத் திறமை, ஆளுமை, பிரச்சினைகளைச் சரியாகக் கையாண்டு தீர்க்கவல்ல மதிநுட்பம் என்பன தெளிவாகத் தெரிந்தன. அவரிடம் மாணவனாக இருந்தோம் என்று எப்போதும் பெருமையாகக் கூறிக்கொள்ளும் வகையில் மாணவர்களை வழி நடத்திய பெரியவர் இவர். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக ஆறு வருடங்கள்


பேராசிரியர் அ. துரைராசா

இருந்தபோது, இதுவரை எந்த வொரு துணைவேந்தரும் சந்திக் காத நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தபோதும் அவற்றைத் தன்னம்பிக்கையா லும், துணிவினாலும், புத்திக் கூர்மையாலும் எதிர்கொண்டு யாழ் குடாநாடே வியந்து பாராட்டும் வண்ணம் சேவை செய்தார். கலாநிதிப் பட்ட ஆய்வுக் கட்டுரைக்காக இவர் ஆராய்ச்சியை மேற்கொண்ட போதுதான் இவரின் அறிவின் ஆழம், மேதாவிலாசம் என்பன உலகத்திற்குத் தெரிந்தன. Simple Shear Apparatus என அழைக்கப்படும் ''மண்பொறி முறைக் கருவி'' யை அறிமுகப் படுத்தி அதன்மூலம் ''துரையின் கோட்பாடு'' என அவரின் பெய ராலேயே வழங்கப்படும் புதிய கருதுகோள் ஒன்றைக்கண்டுபிடித் தார். உலகத்தின் பல பல்கலைக் கழகங்களில் இது கற்பிக்கப்படு கிறது. குடிசார் எந்திரவியலின் பிரயோகங்களில் இக்கோட்பாடு புதிய புரட்சியை ஏற்படுத்திவரு கிறது, பழகுவதற்கு இனியவரும் எளிமையான பழக்கவழக்கங்க ளும் கொண்டவரும், குழந்தை உள்ளமும் கொண்டவர் பேராசி ரியர் துரைராசா அவர்கள். அவ ரோடு கண்டுகதைத்தவர் எவரும் அவரை ஒருபோதும் வாழ்நாளில் மறக்கமாட்டார்கள். அந்த அள வுக்கு அவர் முகத்தில் அறிவின் வசீகர சக்தி உள்ளது. அவர் தமிழ்மக்களின் உள்ளங்களில் எவ் வாறு இடம்பிடித்திருக்கிறார் என்பதை அண்மையில் அவருக்கு நடைபெற்ற பிரிவுபசார வைப வங்களும், மரணத்துக்குப் பின் னான நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டின.

* *

## பேராசிரியர் எஸ். மகாலிங்கம்

இவரும் வடமராட்சியைச் சேர்ந்தவர். பேராதனைப் பல் கலைக்கழக பொறியியற்பீடத் தின் எந்திரப் பொறியியற் பேரா சிரியராய் நீண்டகாலமாகஇருந்து வரும் பேராசிரியர் எஸ். மகா லிங்கம் அவர்கள் குடிசார் எந் திரவியல், எந்திரப் பொறியியல் ஆகிய இரு துறைகளிலும் நிபு ணர். இவர் அதிர்வு பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டு அதில் ''மகாலிங்கத்தின் கோட் பாடு'' எனும் உலகப் புகழ் பெற்ற கருதுகோள் ஒன்றைக் கண்டுபிடித்தார். உலகப் பிர சித்தி பெற்ற விமானத் தயாரிப்பு நிறுவனமான Rolls Royce Co-mpany யில் தயாரிக்கப்படும் விமானங்களின் இயந்திரங்களில் ஏற்பட்ட அதிர்வின் காரணமாக அவை விரைவில் தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு உட்பட்டன. அதனால் அந்த நிறுவனத்திற்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுவந்தது. இந்த நேரத்தில் அதிர்வுபற்றிய மகாலிங்கத்தின் கோட்பாடு கை கொடுத்து உதவியது. விமானங்

களில் அதிர்வுக்கான காரணம் இனம்காணப்பட்டுத் திருத்தம் மேற்கொள்ளப்பட முடிந்தது. அந்நிறுவனத்திற்கு ஏற்பட்டு வந்த பெருத்த நட்டம் தவிர்க்கப்பட்டது. இதனால் மகிழ்ச்சியுற்ற அந்நிறுவனத்தினர் திரு. மகாலிங்கம் அவர்களைப்பாராட்டியதுடன் அவருக்கு இங்கிலாந்து அரசி உபயோகிக்கும் தரத்திலான கார் ஒன்றை அன்பளிப்புச் செய்தனர். பல லட்சம் டொலர் பெறுமதியான இந்தக் காரைப் பெற்றுக்கொள்ள விரும்பாத பேராசிரியர் அதற்குப் பதிலாக ஜெட் விமான இயந்திரத்தின் வெட்டுமுகத்தோற்ற மாதிரி அமைப்பொன்றைத் தருமாறு கேட்டுப் பெற்றுக்கொண்டுவந்து பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல்பீடத்தில் காட்சிக்கு வைத்துள்ளார். அவர் காரைப் பெற்றிருந்தால் அவரது புகழ் அத்துடன் நின்றிருக்கும் ஆனால் சுயநலம் அறவே இல்லாத பேராசிரியர் மகாலிங்கம் அவர்கள் எதிர் காலத்தில் தன்பெயரைக் காலம் காலமாக நிலைத்திருக்கச் செய்ய வல்லதும், மாணவர் சமுதாயத்திற்கு அறிவைத் தரவல்லதுமான பொருளொன்றையே எடுத்துவந்திருக்கிறார் என்றால் அவரது பரந்த உள்ளத்தின் மாண்புதான் என்னே! எந்திரப் பொறியியலை இலகுவான, எளிமையான விளக்கமான முறையில் கற்பிக்கவல்ல பேராசிரியரிடம் படித்த மாணவர்கள் அவரை என்றுமே மறக்கமாட்டார்கள். அவரின் மேதாவிலாசம் தவழும் முகத்தில் அணிந்திருக்கும்மூக்குக்கண்ணாடி இன்னும் அவரது தோற்றத்திற்கு மெருகூட்டி, காண்பவர் மனதில் அவர் உருவத்தைப் பதிக்கும். இவர் எந்தவொரு இலங்கையரும் இதுவரையில் பெறாத விஞ்ஞான டாக்டர் (பொறியியல்) எனும் பட்டத்தை 1958-ம் ஆண்டு பெற்றார். இன்றுவரை அவருக்கே இப்பட்டம் (**D. Sc. in Engineering**) உரித்தாக இருக்கிறது.

❋

(தகவல் தருபவர்: மேற்படி இரு மேதைகளிடமும் கற்ற அன்புக்குரிய மாணவராவர்.)

---

# சுகவாழ்வும் சோம்பலும்

துருக்கி மன்னன் நாதிர்ஷா இல்லிமீது படை எடுத்தான். தில்லி பாதுஷா அவனை எதிர்கொண்டு அழைத்தான். நாதிர்ஷா தாகத்துக்குத் தண்ணீர் கேட்டான். பாதுஷாவின் பணியாட்கள் புடைசூழ, பட்டுத்துணி மூடிய தங்கக் கோப்பையில் தண்ணீர் கொண்டுவந்தாள் ஒரு அழகிய மங்கை. "எனக்கு இது வேண்டாம்" என்று கூறி நாதிர்ஷா தனது ஆட்களை நோக்கிப் பார்த்தான். தோல்பை ஒன்று வந்தது. அதில் நிரப்பியிருந்த தண்ணீரை நாதிர் அருந்திவிட்டு, "உன் மாதிரி நானும் இப்படி தங்கக்கோப்பையில் தண்ணீர் அருந்திக்கொண்டிருந்தால் நான் துருக்கியிலேயே துருப்பிடித்துக்கிடக்க வேண்டியதுதான். இங்கே வந்திருக்க முடியாது" என்றான். தில்லி பாதுஷா வெட்கித்தலை குனிந்தான்.

தொகுப்பு: க. கனகராசா

ஆதாரம்: இராமராஜ்யம்

# சுருட்டியின் பதில்கள்

தி. பகீரதி, வட்டுக்கோட்டை

❁ சுருட்டியாரே! உமக்குப் பிடித்த கனி எது?

புரட்சித் தலைவரின் இதயக்கனி

பி. லதா, மானிப்பாய்

❁ திரையுலகில் மிளிரும் தாரகைகள் பற்றி...

தாரகைகளல்ல திரைமறைவில் புரளிசெய்யும் தாடகைகள்

வி. சுரேஷ், யா. இ. க

❁ 'மாற்றம் வேண்டும்' என்ன செய்யலாம்?

பொத்தகக் கடையில் வாங்கலாம்

சி சுதாஹினி, திருநெல்வேலி

❁ சுருட்டியாரே! நாவைச் சுருட்டாது நீர் பொல்லாப்பு பேசுவது சரியா?

நாநயத்தைச் சுருட்டினால் நாணயத்தைச் சுருட்டமுடியாதே! (என் வேலை?)

எஸ் ரமேஷ், இருபாலை

❁ ஓட்டப்போட்டியில் முதலாவதாக வர என்ன வழி?

நீங்கள் மட்டும் ஓடுங்கள்

க குகன், அச்சுவேலி

❁ கண்டபடி கடிப்பவர்களை (அறுப்பவர்கள்) திருத்த வழி?

நாய் வாலை நிமிர்த்தேலாது பாருங்கோ!

பு. கல்பனா, நல்லூர்

❁ கார் இஞ்சினுள் எத்தனை கியர் இருக்கும்?

பொத்தகக் கடையில் (சட்டைப்)பொத்தான் இருக்குமா?

ந. திவாகர், வல்வெட்டித்துறை

❁ 1) குடி 2) குடியைக்கெடுக்கும் என்பார்களே! முதலாவது குடி என்பது

கள்ளுச் சாராயம்

கள்ளச் சாராயம்

இ. சேகர், நாவாந்துறை

❁ சுருட்டியாரே! வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க என்ன வழி

உங்களைப்போல எல்லோரும் கேள்வி கேளுங்கள். (அது உங்கள் போன்றோருக்கு வேலை; பதிலளித்தால் /பல்லிளித்தால் எனக்கு வேலை)

ஆ பரணி, கோப்பாய்

❁ தேர்தல் காலத்திற்கும் திருவிழாக் காலத்திற்கும் என்ன வித்தியாசம்?

தேர்தல் காலத்தில் கைக்கு மை பூசுவார்கள்; திருவிழாக் காலத்தில் கண்ணுக்கும் பூசுவார்கள் ❁

# பிரியமானவளே!

நீ வெண்மையானவள் தான்
உன்ளே தான் நஞ்சு
என் உதடுகள் உன்னை
முத்தமிடும் வேளையில்
சிவந்தே போகிறாய்
அது அன்பின்
அறிகுறியல்ல
அபாய அறிவிப்பு
நான் உன்னையே
சுவாசிக்கிறேன்
நீயென் சுவாசப்பைகளையே
சுவைத்துக் கொள்கிறாய்
புகைந்து கொண்டிருப்பது
நீ மட்டுமல்ல
என் குடும்பத்தின்
வயிறுகளும் தான்.
சிகரெட்!
ஓ—
நீ வெண்மையானவள் தான்
ஆனால்,
உன்னிடத்தில் உண்மையில்லை
நான் விவாகரத்திற்காக
விரைந்து கொண்டிருக்கிறேன்.




ஃ இ. ஜெயக் மார்

## அறிவியல் மாமா

நீங்கள் கேட்ட சிந்தனையைத் தூண்டும் கேள்விகளுக்கு பலர் சரியான விடைகளை அனுப்பியிருந்தார்கள். மாமா கேட்டபடி உங்களில் பலர் கேள்விகளையும் கேட்டுள்ளார்கள். நீங்களும் கேட்கலாம். அக்கேள்வி சிலவற்றை இங்கு பிரசுரிக்கின்றோம். பதில்களை விளக்கமாக எழுதுங்கள்.

### சென்றமுறை கேள்விகளுக்கான விடைகள்

க. நிமலன், ச. பகீரதன்,
க. கௌசல்யா, ப. வேணு

1. உயிர்வாயு என்பது என்ன? அது எப்படி உற்பத்திசெய்யப்படுகிறது?

அ) சதுப்பு நிலங்களில் அல்லது சேற்று நிலங்களில் அல்லது வயல்களில் சுயாதீனமாகவே வெளிப்பட்டு எரியும் இயற்கை வாயுவே உயிர் வாயு எனப்படும்.

ஆ) தாவரங்கள் (ஆகாயத் தாமரை, நீர்ப்பூண்டுகள் போன்றன) அல்லது மனிதர்கள், விலங்குகளின் (மாடு) கழிவுகளில் இருந்து அல்லது பறவைகளின் (கோழி) எச்சங்களில் இருந்து அவற்றைப் புளித்துப்பொங்குதல் செய்முறைக்குட்படுத்தியே உயிர் வாயு உற்பத்திசெய்யப்படும்.

இ. இராஜன், சி. திலீபன், சு. சக்தி

2. வானவெளியில் வளிமண்டலத்திற்கு அப்பால் பயணம் செய்பவருக்கு வானம் கருமையாகவே தோன்றும் எனக் கூறப்படுகிறது. இது ஏன்?

வானவெளியின் வளிமண்டலத்திற்கு அப்பால் வளி இல்லையாதலால் அங்கு தூசுத் துணிக்கைகளும் இல்லை. சூரிய ஒளிபட்டுத் தெறிப்பதற்கு ஏதும் அங்கு கிடையாது. ஆகையினால் வானம் கருமையாகவே தோன்றும். வளிமண்டலம் உள்ள பகுதியில் தூசுத் துணிக்கைகளில் தெறிக்கும் சூரிய ஒளியில் நீல நிறக்கதிர்களே அதிகம் சிதறப்படுவதால் எமக்கு வானம் நீலமாகத் தோன்றுகிறது.

சி. வதனா, தா. கரன், எஸ். வேலவன்

3. மசகிடும் எண்ணெய்யை இயந்திர சாதனங்களில் உபயோகிக்கும் நோக்கம் யாது?

மசகிடும் எண்ணெய்யானது இயந்திர சாதனங்களின் சுழலும் பாகங்கள் தொடுகையில் உள்ளபோது அவற்றிற்கிடையேயுள்ள உராய்வைக் குறைக்கவும், உராய்வினால் ஆகும் தேய்வையும், வெப்பத்தையும் குறைக்கவும் உபயோகிக்கப்படுகின்றது.

த. சுவேதன், இ. கேமா

4. அதிநவீன கம்பியூட்டர் சாதனமா? மனித மூளையா ஆற்றல் கூடியது?

கம்பியூட்டரையே கண்டுபிடித்தது மனிதமூளைதான் மனிதனுக்குச் சிந்தித்துப் பகுத்து ஆராயும் ஆற்றல் உண்டு. கம்பியூட்டருக்கு ஏற்கனவே கொடுத்த நிகழ்ச்சித் திட்டக் கட்டளைகளை நிறைவேற்றவேமுடியும். எவ்வளவுதான் நவீன விஞ்ஞான சாதனையாக கம்பியூட்டர் உருமாறினாலும் அது மனித மூளையின் ஆற்றலுக்கீடாக மாட்டாது.

க. தினேஷ், சு. மாறன்

5. வௌவால் ஆழ்ந்த இருட்டிலும் எதிரிலுள்ள தடைகளில் மோதாமல் பறக்கிறது. இது எப்படிச் சாத்தியமாகிறது?

வௌவால் இருட்டில்பறந்து செல்லும்போது தன்வாயால் ஒருவித கேளா ஒலியை (ஒரு லட்சத்து 30,000 வரை அதிர்வெண் உடையது) விட்டுவிட்டு வெளிப்படுத்திக் கொண்டே செல்கிறது. இவ்வொலி எதிரிலுள்ள தடைகளில் பட்டுத்தெறித்துவரும் எதிரொலியின் தன்மையை உணர்ந்தே வௌவால் தடைகளில் மோதாமல் பறக்கத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறது. மனிதர்களுக்கு 20முதல் 20,000வரையுள்ள அதிர்வெண்கொண்ட ஒலியே கேட்கும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இதோ இம்முறைக்கான கேள்விகள்

சி. மதன் தெல்லியடி

1. மாமா! நிலக்கரி எவ்வாறு உண்டாகின்றது?

க. விந்தன், சுன்னாகம்

2. கரும் பொந்துகள் [Black Holes] என்றால் என்ன மாமா?

எ. அகிலன், சுழிபுரம்

3. ஒளியியல் பற்றி ஆராய்ச்சிசெய்த தமிழகத் தமிழ் விஞ்ஞானி யார்? அவர் கண்டுபிடித்த உண்மை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

சி. ரோகினி, சுதுமலை

4. ''அணுக்குண்டின் தந்தை'' எனப் போற்றப்படுபவர் யார்?

ம. நிஷானி, நல்லூர்

5. வளைவான பாதையொன்றில் வேகமாகத் திரும்பும்போது எமது சைக்கிள் வண்டி ஒரு பக்கமாகச் சரிகிறதே ஏன்?

6. வெங்காயத்தை உரிக்கும்போது கண்ணில் நீர் வடிவதேன்?




# காசநோய்

**இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் காசநோய் ஓர் உயிர்க் கொல்லி நோயாகவே இருந்தது. ஆனால் இன்று விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டாலும் வளர்முக நாடுகளில் இந் நோயின் தாக்கம் கணிசமாகக் காணப்படுகின்றது.**

உலக சுகாதார ஸ்தாபன [W. H. O.] வருடாந்த அறிக்கைகளை நோக்குமிடத்து காசநோயானது வளர்முக நாடுகளில் வலம் வரும் நோயாகவே தோற்றம் தருகின்றது. உலகில் இந் நோயால் பீடிக்கப்பட்டவர்களுள் ¾ பங்கினர் வளர்முக நாட்டவரே. இதற்கு முக்கிய காரணங்கள் ஆரம்ப நிலையில் நோயை இனம் கண்டு சிகிச்சை வழங்கப்படாமையும், போசாக்கின்மையுமே என கூறப்படுகின்றது.

இந் நோயானது ஆண் பெண், இருபாலாரையும், எல்லா வயதினரையும் தாக்கும் நோயாகும். எனினும் 35 — 55 வயதிற்கு இடைப்பட்ட ஆண்களையே கூடுதலாகப் [60%] பாதிக்கின்றது என புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் காசநோய் ஓர் உயிர்க்கொல்லி நோயாகவே இருந்தது. 1906-ம் ஆண்டு இரு பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் (Calmette and Guerin) B. C. G [Bacille Calmette Guerin] என்னும் தடுப்பு ஊசியை உலகிற்கு அறிமுகப்படுத்தினர். இது 1920 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலகில் மக்களது பாவனைக்கு விடப்பட்டது. இது இறப்பு வீதத்தை வெகுவாகக் குறைத்தது.

● க. பிரதீபன்
(யாழ். மருத்துவபீடம்)

வளர்ச்சியடைந்த நாடுகளில் இறப்புவீதம் 1,00,000 பேரில்

1 – 2 பேரும், வளர்முகநாடுகளில் இறப்பு வீதம் 1,00,000 பேரில் 60 – 100 பேரும் இந்நோயால் இறக்கின்றனர்.

(Myco Bacteria Tuber Closis) ஒருவகை பற்றீரியாவே இந்நோய்க்குக் காரணம் என Koch என்னும் விஞ்ஞானி கண்டுபிடித்தார். இக்கிருமியானது நோயாளியினதும், காவிகளினதும் [சிலரில் கிருமிகள் நோய் அறிகுறிகளைத் தோற்றுவிக்காமல் அல்லது நோய் அறிகுறிகள் மறைந்த பின்னரும் பல வருடங்களாக உடலில் காணப்படலாம்.] இருமல் போது காற்றில் வெளிவிடப்படும் சளித் துளிகள் மூலமாக நோய் அற்றவரின் சுவாசத் தொகுதியையோ அல்லது உணவுக் கால்வாய் தொகுதியையோ அடைகிறது. இங்கு மனித எதிர்ப்ப சக்தியை மீறும் பட்சத்தில் [BCG தடுப்பு ஊசி ஏற்றுக் கொள்ளாதவர், வேறு நோயால் பாதிக்கப்பட்டவர், உடல் போசாக்கு நிறைகுறைவாக இருப்பவர்களில் எதிர்ப்புத் திறனும் குறைவாகவே இருக்கும்] கிருமி பல்கிப் பெருகி நோயாக உருவெடுக்கிறது.

இக் கிருமிகள் பொதுவாக நுரையீரல்களையே தாக்குவன வாயினும் உணவுக்கால்வாய், தொண்டை போன்ற உடற்பகுதிகளையும் தாக்கும் வல்லமை படைத்தவை. இவை நுரையீரலின் சிறிய காற்றுச்செல்லும் குழாய்களையும் அதனோடு தொடர்புடைய குருதிக் கலன்களையும் சேதமாக்குகின்றன. இதன் போது வெளிவரும் குருதியானது இருமலுடன் வெளியேற்றப்படுகின்றது. மற்றும் குருதி, நிணநீர்க் கலங்கள் மூலமாக கிருமியானது வேறு பகுதிகளிற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது நுரையீரலைப்பொறுத்தவரையில் சிறு காற்றுக் குழாய்களை அடைப்பதால் ஒரு சோணையையோ (LOBE) அதன் சிறுபகுதியையோ (Segment) சுருங்கச் செய்து (Collapse) வழமையான சுவாசச் செயற்பாட்டைப் பாதிக்கின்றது.

படிப்படியாக மற்றைய சோணைகளையும் சுவாசப்பை சுற்று மென்சவ்வையும் பாதிக்கிறது. (Pleurisy) இது சுவாச அசைவுகளின் போது வலியையும் உண்டுபண்ணுகிறது.

## ❋ நோயின் அறிகுறிகள்

❋ சுவாசத் தொகுதி

(அ) தொடர்ச்சியான இருமல், இருமலுடன் சளி குருதி என்பனவும் வரலாம்.

(ஆ) சுவாசிக்கும் போது வலி, சுவாசித்தல் கடினத்தன்மை. (பொதுவாக நோயின் பிந்திய அறிகுறி)

❋ உணவுக் கால்வாய்த் தொகுதி

அ) வயிற்றுப் போக்கு சில வேளை மலத்துடன் குருதி, சமிபாடின்மை,

முழுமையாக அகத்துறிஞ்சப்படாமை.

ஆ) வயிற்று வீக்கம்

இ) பசியின்மை, நிறை குறைவு

❀ கீழ்வரும் அறிகுறிகள் சில வேளைகளில் சுவாச அறிகுறிகளுடன் காணப்படலாம்.

❀ தோல் — தோல் அலர்ச்சி

❀ சிறுநீரகத் தொகுதி

சிறிதளவு சிறுநீர், அடிக்கடி வெளியேற்றப்படல் சிறுநீருடன் குருதி வெளியேறுதல்

❀ கண்

Kerotin படிவுகள் விளி வெண்படலத்தில் தோன்றலாம். விளி வெண்படல அலர்ச்சியும் உருவாகலாம்.

❀ நிணநீர்த் தொகுதி

பொதுவாக கழுத்துப் பகுதி நிணநீர்க் கணுக்கள் வீங்கிக் காணப்படலாம்.

மற்றும் பொதுவான அறிகுறிகளான காய்ச்சல், இரவு வேளைகளில் அதிக வியர்வை, சோம்பல், அதிவேக இதயத் துடிப்பு. தலையிடி. குருதிச் சோகை போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

நோய் தொற்றியதில் இருந்து 3-6 வாரங்களிற்குள்ளாக (சில வேளையில் வருடங்களான பின்) அறிகுறிகள் தோன்றலாம். இவர்களில் இருந்து பெறப்படும் சளி, X-Ray போன்றவற்றில் இருந்தும் Tuberculin Tebt எனப்படும் பரிசோதனைகளின் பின் இது காச நோயா இல்லையா என உறுதி செய்யப்படுகின்றது.

❀ காச நோயைத் தடுத்தல்

1. B.C.G. தடுப்பூசி ஏற்றிக் கொள்ளல். இது பொதுவாக பிறந்த உடனே பிள்ளைகளிற்கு போடப்படுகிறது.

2. ஆரம்ப அறிகுறிகள் (காய்ச்சலுடன் மாறா இருமல் இரு வாரங்களிற்கு மேலாக) உள்ளவர்கள் வைத்திய ஆலோசனை பெறுதல்.

3. நோயாளியின் பராமரிப்பு -

தும்மும் போதும், இருமும் போதும் கைக்குட்டைகளை உபயோகித்தல் கண்ட இடங்களில் துப்பாமை, தொற்று நீக்கிகளை உபயோகித்து தொற்று நீக்கல், மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி வழங்கல் போதிய போசாக்குள்ள உணவுகளை சமிபாடு அடையக் கூடிய வகையில் வழங்கல்.

1. நெருக்கம் குறைவான, காற்றோட்டம் உள்ள வீடுகளை அமைத்தல்.

2. மக்களது பொருளாதார போசனை நிலையை உயர்த்துதல்.

# பிழை திருத்தம்

மாற்றம் தை — பங்குனி (1994): 6-ம் இதழில் 'சுருட்டியின்பதில்கள்' பகுதியில் இறுதிக் கேள்விக்கான பதில் அச்சுப்பிழை காரணமாக தவறாக பிரசுரமாகி விட்டது ''சாமக் கோஷ்டியில் நம்ஸ் அடிகாரர்களாகமாறலாம்'' என திருத்தி வாசித்துக் கொள்ளுங்கள் இதனால் யாரும்பாதிக் பட்டிருந்தால் அதற்காக நாம் மனம் வருந்துகிறோம்.

ஆ-ர்.

3. காவிகளை அடையாளம் கண்டுபிடித்து மருந்து வழங்கல்.

4. பொது இடங்களில் கண்ட படி துப்புதலை தவிர்க்க ஒதுக்குப்புறமான இடத்தில் துப்புவதற்கான வாளிகளை வைத்தல், பின்னர் தொற்று நீக்கி அழிக்கலாம்.

5. மக்கள் நெருக்கமாக உள்ள இடங்களில் புகைத்தல் தடைசெய்யப்படலாம்.

இந் நோயை கட்டுப்படுத்துவது தனிப்பட்ட ஒவ்வொருவரின் பங்கு அவசியமாகும் ❋

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

## ★ திருமண வீட்டில் வாழை ஏன்?

திருமண வீடுகளில் வாழையை, மரத்துடனும் குலையுடனும் பூவுடனும் கட்டி வைப்பதன் அர்த்தம் என்ன?

காஞ்சி மடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் விளக்கம் தந்துள்ளார்.

❋ வாழைமரம் இருக்கிறதே. அது மனிதனுக்கு சகலமும் அளிக்கிறது. உணவு சாப்பிட இலை, காய், கனி, பூ. தருகிறது.

❋ நார் பூமாலை தொடுத்து இறைவனுக்கு சாத்தலாம். பெண்களும் பூச்சூடிக் கொள்ளலாம். பட்டை மருந்தாகிறது வாழைத்தண்டு சமையலுக்கு மட்டுமல்ல, அதன் சாறு விஷ முறிவுக்கு மருந்தாகும்.

❋ வாழைக் கன்று மரத்துடன்தானே வளரும். வாழையிலை சருகாகிவிட்டாலும் அதுவும் உபயோகமாகிறது.

❋ மணமக்கள் இப்படி வாழையடி வாழையாகத் தழைத்துக் குடும்பம் பெருகி வளரவும், மங்கலமாகக் காட்சி தரவும் கல்யாண வீடுகளிலும் முன்புறம் பந்தலிலும் கட்டப்படுகிறது.




# "மதுவும் உளவியலும்"

∴ தெல்லியூர் சக்திவேல்

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்ற குறளுக்கேற்ப மதுவானது உடல், உள, சமூக, ஆத்மீக சம நிலையைத் தாக்கி ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கச் செய்யும் நஞ்சாகத் தொழிற்படுகின்றது. மதுவானது மனிதனது சிந்தனா சக்தியை மழுங்கடிக்கச் செய்வதுடன், மாணவர்களது அறிவியல் வளர்ச்சியையும் பாதிக்கச்செய்கின்றது. மாணவர்களது அறிவியல் வளர்ச்சியானது குறிப்பாக மன வளர்ச்சியில் பிரதானமாகத் தங்கியுள்ளது.

சமூக கலாசார பண்பாட்டு நிலைமைகள், சூழ்நிலை, தொழில் செய்யும் இடத்தில் இலவசமாக மது கிடைத்தல், நண்பர்களது சேர்க்கை ஆகிய காரணிகள் மது அருந்துதலைத் தூண்டுகின்றன. மேலும் உளவியல் ரீதியான காரணங்களும் மது அருந்துதலைத் தூண்டுவதில் சிறப்பான இடத்தை வகிக்கின்றன.

மன அழுத்தம், அதிக வேலைப் பளு, குழந்தைப்பருவத்தில் அதிக கண்டிப்பு, தாழ்வு மனப்பான்மை, சமூக, பாலியல் தொடர்பற்ற குடும்பப் பிரிவு, தாய்ப்பால் அருந்தும் காலங்களில் ஏற்பட்ட பயம், ஏக்கம், ஏமாற்ற உணர்வுகள் ஆகிய பல் வேறுபட்ட உளவியல் சார்ந்த காரணிகள் மது அருந்துதலை ஊக்கப்படுத்துவனவாயுள்ளன. வாழ்க்கைப் பயணத்தில் ஏற்படும் சில விரும்பத்தகாதவிடயங்களை மறந்து வாழவும் மதுவை உள்ளெடுக்கின்றனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிலர் சமூக விரோத செயல்களில் ஈடுபடும் நோக்குடன் மதுபானத்தை உள்ளெடுக்கின்றனர். இந்தவகையில் "மது அடிமை என்பது மனிதனது பண்பியல் தொகுப்பில்

ஏற்படும் மாறுபாடு'' என உள யல் ஆய்வாளர்கள் கருதுகின்ற னர்.

ஈதைல் அற்ககோல், ஈதைல் அசற்றேற்று, ஐசோ ஏமைல் அற்ககோல். பீ வகை விற்றமின் கள், வெல்லங்கள், கலியுப்புகள் காபனீரொட்சைட்டு போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் மது பானத்தில் காணப்படுகின்றன. கசிப்பு போன்ற சட்டவிரோத மாகத் தயாரிக்கப்படும் மது பானங்களின் மூலப் பொருட் களாக பற்றரி, இறந்த சிறிய விலங்குகள், அழுகிய பழங்கள், யூரியா ஆகியன பயன்படுத்தப் படுவதால் உடலில் இவற்றின் தாக்கம் மிக அதிகமாகும் கசிப் புப் போன்றவற்றில் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய மீதைல் அற்க கோல்எனும் இரசாயனப்பதார்த் தம் காணப்படலாம் மேலும் மதுவினால் ஏற்படும் உடல். உள தாக்கங்களானது உட்கொள்ளும் மதவகை, அளவு, செறிவு, வயது பழக்கவழக்கம், உடல்நிலை, மனநிலை ஆகிய காரணிகளில் பிரதானமாகத் தங்கியுள்ளது.

''கஞ்சாப்புகை பிடியாதே
—வெறி
காட்டி மயங்கியே கட்குடி
யாதே
அஞ்சவுயிர் மடியாதே - பத்தி
அற்றவஞ் ஞானத்தினால்
படியாதே''

- கடுவெலிச்சித்தர் -

தமிழர் அறிவுக் கோட் பாட்டு வளர்ச்சியிலே, அறிவியக்க வாதிகளாகவும், உள நல மருத் துவர்களாகவும் திகழ்ந்த சித்தர் கள் மதுவினால் ஏற்படும் உடல். உள, சமூக, ஆத்மீக தாக்கங் களை உணர்ந்து அவற்றைத் தடுப்பதற்காகக் கூறிய சமூக, உள, மருத்துவ அறிவுரைகளை உளவியல் ரீதியாக ஆராய்வது பயனுடையது.

மனிதனில் முக்குணங்களாக சொல்லப்படுகின்ற இரஜோ குணம், தமோகுணம், சத்தவ குணம் ஆகியவற்றில் மதுவானது இரஜோகுணத்தை அதிகரிக்கச் செய்து உளவியல் பிரச்சினை களைத் தோற்றுவிக்கின்றது. மதுவை உள்ளெடுப்பதால் தொழில்புரியும் இடங்களில் பிரச் சினை ஏற்பட்டு தொழிலிலிருந்து நீக்கப்படுவதால் மனக்குழப்பம் சார்ந்த பிரச்சினைகள் உருவா கின்றன குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளால் பெற்றோர்க ளது மனநிலை பாதிக்கப்படுவ தோடு குழந்தைகளின் அறிவியல் ஆளுமையும், உள வளர்ச்சியும் பாதிப்படைகின்றன. மது அதிக மாக உட்கொள்ளப்படுவதனால் நரம்புத்தொகுதி தாக்கப்பட்டு பாலியல் தொழிற்பாடு பாதிக் கப்படுகின்றது. உடலுறவுச் சிக் கல், விதை, ஆண்குறி சுருங்கு தல், குறைந்த எண்ணிக்கையான சுக்கிலப் வெளிவரல் ஆகியன ஏற் படுவதோடு பாலியல்சார்ந்த உள வியல் சிக்கல்களை உருவாக்குவ தில் மது முக்கிய பங்கு வகிக்கின் றது. மேலும் களவு, கொலை பாலியல் குற்றச்செயல்களைத்

தூண்டுவதோடு தற்கொலைசெய் வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கின்றன.

மது உட்கொண்டு சிறிது நேரத்தில் ஒரு போலியான மன மகிழ்ச்சி, போலியான தன்னம் பிக்கை என்பன ஏற்படுகின்றன மது உட்கொள்ளும் அளவுகூடும் போது மனக்குழப்பம், பொரு ளற்ற, உண்மையற்ற, தடுமாற்ற மான பேச்சு, முறையற்ற, பய னற்ற தீர்மானங்கள், தடுமாற்ற மான நடை. இரைச்சல்மிகுந்த பேச்சு, கூச்சமற்ற சுபாவம், சாதாரண விடயங்களைக்கூடச் செய்யமுடியாத நிலை ஆகிய இலட்சணங்களும் காணப்படும். தொடர்ந்து நீண்ட காலமாக அதிகளவு மது அருந்துபவர்களி டத்தில் குறுகியகால மறதி [Short

# தேசாபிமானி யார்?

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். இன்றைய சூழ்நிலையில் பொது நலனையே கருத்திற்கொண்டு மக்களுக்குப் பணியாற்றுகின்ற மனிதன் யார்? அவர் ஆற்றும் பணி என்ன? போன்ற விபரங்களை அனுப்பி வையுங்கள்.

நடைபெறும் சுற்றுக்களில் அதிகப்படியான ஆதரவுச் சீட்டுக் களைப் பெறுபவர் ''1994ம் ஆண்டுக்கான தேசாபிமானி'' யாகக் காக் கௌரவிக்கப்படுவார்.

போட்டி விதிகள்:

1. போட்டிகள் ஒவ்வொரு காலாண்டுக்குமாக மூன்று சுற்றுக்கள் நடைபெறும்.
2. ''மாற்றம்'' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் படிவங்களே நிரப்பி அனுப்பப்படவேண்டும்.
3. ஒவ்வொரு சுற்றிலும் மூன்று வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப் படும் பரிசுத்தொகை ரூ. 500-00 பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.
4. படிவங்களை 15-08-1994-க்கு முன் மாற்றம் பணிமனை, புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி என்ற புதிய முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5. இரண்டாவது சுற்று முடிவுகள் அடுத்த மாற்றம் இதழில் பிர சுரிக்கப்படும்.
6. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. எந்தவிதமான கடிதத் தொடர் புகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

---

போட்டி இல. 02 ஆதரவுச் சீட்டு - 02

உங்கள் பெயர்: ..........................................

முகவரி: ..........................................

தேசாபிமானியின் பெயர்: ..........................................

முகவரி: ..........................................

என்ன காரணங்களுக்காக அவரைத் தேசாபிமானியாகத் தெரிவு செய்கிறீர்? குறைந்தது ஐந்து காரணங்கள் எழுதுங்கள்.

TremAmnesic or Memery Blackout] சந்தேக உணர்வு, தூக்கப் பிரச்சினைகள், விரக்தி, மனச்சோர்வு வாழ்க்கையில் முன்னேறும் ஆர்வமின்மை, பிறரோடு சண்டையிடல், உடல் நடுக்கம், நா நடுக்கம், நரம்பு பாதிப்பு ஆகிய உளவியல் சார்ந்த பாதிப்புக்கள் காணப்படும்.

தொடர்ந்து மது அருந்துவதால் சமிபாட்டுத் தொகுதி பாதிக்கப்படுகின்றது. இதனால் 'தயமின்' [உயிர்ச்சத்து பி 1] எனும் விற்றமின் குறைவடைவதால் 'கோர்சகாவ் மனநோய்' [Kotsa Koff Psychosis], வேர்னிக்ஸ் மனக்குழப்பநோய் [Warsicke's Encephalopathy] ஆகிய மனநோய்கள் ஏற்படுகின்றன. கோர்சகாவ் மனநோயில் அண்மைக்கால நிகழ்ச்சிகள் ஞாபகத்திற்கு வருவதில்லை. ஆனால் நோய் ஏற்பட்டதற்கு முன் நடந்த நிகழ்ச்சிகள் ஞாபகத்தில் இருக்கும், இவர்களிடம் அண்மைக்கால விடயங்களைப் பற்றி கேட்கும்போது ஞாபக மறதி காரணமாக நடக்காத பல விடயங்களைக் கற்பனையாகப் புனைந்து கூறுவதை அவதானிக்கலாம்.

நெடுங்காலமாக மதுவை உட்கொள்பவர்கள் அதனைத் திடீரென நிறுத்தும்போது ஒரு வகை மனக்குழப்ப நிலைக்கு [Delirium Tremens] உள்ளாவதாக உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இவ்வித மனக்குழப்ப நிலையில் நித்திரையின்மை பயங்கரக் கனவுகள், தலைவலி, பயம் பதற்றம், அதிக உணர்ச்சி, அளவுக்கதிகரித்த வியர்வை, அதிகரித்த இரத்த அமுத்தம், படபடப்பு. போலிக்கண்ணோட்டம், [Visual Auditory Hallucination] மயக்கம் போன்ற குறிகுணங்கள் காணப்படலாம். போலிக்கண்ணோட்டம் [Alcoholic Hallucination] எனும் நிலையில் பகைவர், விஷப்பூச்சிகள் தம் எதிரில் நிற்பதாகக் கூறுவர். அத்துடன் காதுகளில் பயமுறுத்தும் மாய ஒலிகள் கேட்பதாகக் கூறுவர்.

ஆரம்ப சுய உதவிக்குழு [Alcoholic Ananimous], அச்சமூட்டி செயலூக்கம் கொடுக்கும் முறை [Antaous Therapy], மனவழிமருத்துவம் குடும்பவழி மருத்துவம் [Family Therapy], குழு மருத்துவம் [Group Theapy], நடைமுறை குணதல மாற்று மருத்துவம் [Behaviour "Modification! ஆகியஉளவியல்சிகிச்சை முறைகள் மூலமும், மருந்துகள் மூலமும் மதுபானம் உட்கொள்பவருக்குச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சுயஉதவிகுழு முறையில் மதுப் பழக்கத்தை நிறுத்தியவர்கள் தமக்கு மது சிாவனையால் ஏற்பட்ட பிரச்பனைகளை ஏனையோருக்கு விளக்குவர். யோகாசனம், தியானம் என்பன மது அடிமைநிலை ஏற்படாது தடுக்கும் முக்கிய உளவியல் தடுப்பு முறைகளாகும் ❃

# ஜெயராஜ் ? பதில்

❀ ஈழத்து இலக்கியவாதிகளின் தரம்பற்றி உங்கள் அபிப்பிராயம்?

ம. சுமனன்

தரம் என்பது ஒப்பீட்டில் வருவது. மூன்றோடு ஒப்பிடும்பொழுது ஐந்து பெரிது ஏழோடு ஒப்பிடும்பொழுது ஐந்து சிறிது. தரம் என்பதும் இத்தகைய ஒப்பீட்டிலேயே பிறக்கும். எனவே ஈழத்து இலக்கிய வாதிகளை நீங்கள் யாரோடு ஒப்பிடுகிறீர்கள் என்பதைத் தெரிந்தால்த் தான் அவர்கள் தரம்பற்றிச் சொல்லலாம்.

❀ இந்த விஞ்ஞான யுகத்தில் ஆதியும் அந்தமும் இல்லா தவனை ஆண்டவன் என்று கூறுவது நகைப்புக்குரியதல்லவா?

வே. ஆரணி

விஞ்ஞானத்தின் அடிப்படை கணிதம். கணிதத்தின் அடிப்படை எண்கள். எண்களில் முடிவான எண் முடிவிலி. ஆகக்குறைந்தஎண்ணும் முடிவிலி. விஞ்ஞானமே தொடக்கமும் முடிவும் இல்லாத ஒன்றை நம்பித்தான அமைகிறது.

❀ நல்லவர்களான வீஷ்மன், துரோணர் முதலியோர் தீயவரோடு சேர்ந்து அழியக் காரணமென்ன?

க. ராஜன்

பாவத்தைப் பார்த்திருந்த குற்றம்.

❀ உங்களுக்குப் பிடித்த சிறந்த கவிஞன் யார்? அவரின் சிறந்த கவிதை எது?

தி. மோகன்

கவிஞன் — ஆண்டவன்
கவிதை — இவ்வுலகம்

❀ இலக்கியத்தின் நோக்கம் என்ன?

சு. மதி

உடலால் மனிதனாய்ப் பிறந்தவனை மனதாலும் மனிதனாக்குவது.

அடுத்த இதழிலும் கர்பவாருதி இ. ஜெயராஜ் அவர்கள் பதிலளிக்கிறார். உங்கள் கேள்விகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

ஆ-ர்

ஆணே உனக்கு என்ன விலையா?
அவனியில் நீ உயிரற்ற சிலையா?

NATHIYA JEWELLERY

அழகிற்கு
அழகுசெய்யும்

அழகிய தங்கப்பவுண்
நகைகளுக்கு

# நதியா நகை மாடம்

2, கஸ்தூரியார் வீதி – யாழ்ப்பாணம்

உரிமையாளர்: சண்முகம் இராஜேஸ்வரன்

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

எத்திசையும் தித்திக்கும் தேன் சிந்தும்

## ஐஸ்கிறீம் வகைகள்

தயாரிப்பதில் முன்னோடிகள்

RATNAM INDUSTRIAL ORGANIZATION

றியோ

R I O

# றியோ

75, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.